
தாய்ப்பாசம் என்ற இறை அற்புதம்

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 DECEMBER

மலர்: 11 இதழ் : 3 டிசம்பர் 2017 விலை: ரூ. 5



மூளை புறப் பரப்பு



தோலின் அடுக்குகள்




சிறுகுடல் நுண்ணுறிஞ்சிகள்

## க்ளோஸ்-அப்பில் உங்கள் தோற்றம்!

- எப்பொருளும் இன்றி அவர்கள் படைக்கப் பட்டார்களா? அல்லது அவர்களே படைக்கக் கூடியவர்களா? (திருக்குர்ஆன் 52: 35)




நரம்பணுக்கள்




நாக்கும் சுவை மொட்டுகளும்



கணைய செல்கள்



சிறுநீரக நுண்குழல்




சிறுநீரக புறப்பரப்பு



உட்செவி மயிரிழை செல்கள்

# உங்கள் முதல் முகவரி








## பிறப்பு என்ற பேரற்புதம்


● நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? நீங்கள் செலுத்துகின்ற இந்த இந்திரியத்துளியைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா? (திருக்குர்ஆன் 56:57–59)


● நிச்சயமாக நாம் மனிதனைக் களி மண்ணில ருந்துள்ள சத்தினால் படைத்தோம்.. பின்னர் நாம் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்பு களாகவும் ஆக்கினோம் பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் – (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். (திருக்குர்ஆன் 23:12–14)

● இறைவன் எவ்வாறு முதன் முறையாகப் படைக்கின்றான் என்பதையும், பிறகு எவ்வாறு அதை மீண்டும் படைக்கின்றான் என்பதையும் அவர்கள் என்றுமே கவனித்ததில்லையா? (மீண்டும் படைப்பது எனும்) இந்தப் பணி திண்ணமாக, இறைவனுக்கு எளிதானதாகும். (திருக்குர்ஆன் 29:19)

● உங்கள் அனைவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உண்டாக்கிப்பின் (உங்கள் தந்தையிடம்) தங்க வைத்து, (பின்னர் கர்ப்பத்தில்) ஒப்படைப்பவனும் அவனே. சிந்தித்து விளங்கிக் கொள்ளக் கூடிய மக்களுக்கு நிச்சயமாக நம் வசனங்களை விவரித்துள்ளோம். (திருக்குர்ஆன் 6:98)







அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 DECEMBER

மலர்: 11 இதழ் : 3 டிசம்பர் 2017 விலை: ரூ. 5

## பொருளடக்கம்

நீங்கள் தோன்றியபோது நிகழ்ந்த அதிசயங்கள்!–2
நோய் இறை அடியானுக்கு வரம் –6
கருவியலைத் திருத்திய குர்ஆன் வசனங்கள்–7
வாசகர் எண்ணம் –10
தாய்ப்பாசம் என்ற இறை அற்புதம் –11
பாசத்தலைவன் பசியாறுவது எப்போது? –13
நமது சம்பாத்தியம் அனுமதிக்கப்பட்டதா இல்லையா?– 15
இறைவன் அல்லாதவற்றை வணங்குவோரின் நிலை –16
மனம்திருந்துவோருக்கு மன்னிப்புண்டு–18
மக்கள் சேவையின்றி மகேசனை அணுகமுடியாது–19
அண்டை வீட்டாரின் உரிமைகள்–21
அண்டை வீட்டாருக்கு தொல்லை தருதல் கூடாது –23

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775 / 09886001357**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# நீங்கள் தோன்றியபோது நிகழ்ந்த அதிசயங்கள்!

இந்த உலகில் உங்கள் முதல் இருப்பிடம் கருவறை. ஓர் உயிர் தனக்குள்ளிருந்து இன்னொரு உயிரைப் புதிதாக உருவாக்கித் தரும் அற்புத விஷயம்தான் மனிதப் பிறப்பு என்பது! அதில் நிகழும் அறிவியல் அதிசயங்கள் கொஞ்சநஞ்சமா? ஒரு சைக்கிள் தயாரிக்கும் தொழிற்சாலையில் இருந்து ஒரு சைக்கிள் தயாரிக்கப்பட்டு வெளிவருவதற்கு என்னென்ன தேவை என்பதை யோசித்துப் பாருங்கள்... கச்சாப்பொருட்கள், பக்குவமான இயந்திரங்கள், உபகரணங்கள், திறன் மூலம், பணியாளர்கள், பல்வேறு துறைகள் ஒருங்கிணைத்தல், திட்டமிடுதல், கண்காணிப்பு, தரக்கட்டுப்பாடு என பற்பல இன்றியமையாத தேவைகள் இருப்பதை அறிவீர்கள். அதேவேளையில் புதிதாக ஓர் உயிர் உருவாவதற்கும் அதே உயிர் மீண்டும் ஒரு உயிரை உற்பத்தி செய்வதற்கும் பின்னால் என்னென்ன தேவைகள் இருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியுமா?

எண்ணற்ற ஜீவிகளை அவற்றின் பக்குவத்தோடும் நுணுக்கங்களோடும் ஆரம்பம் முதலே படைத்தது மட்டுமல்ல பக்குவமான முறையில் அவற்றின் இனப்பெருக்கத்தையும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் இறைவனின் படைப்பாற்றலைப் பற்றி வியக்காமல் இருக்கமுடியுமா?

- **இறைவன் எவ்வாறு முதன் முறையாகப் படைக்கின்றான் என்பதையும், பிறகு எவ்வாறு அதை மீண்டும் படைக்கின்றான் என்பதையும் அவர்கள் என்றுமே கவனித்ததில்லையா? (மீண்டும் படைப்பது எனும்) இந்தப் பணி திண்ணமாக, இறைவனுக்கு எளிதானதாகும். (திருக்குர்ஆன் 29:19)**

இவ்வுலகில் மனிதன் தோன்றியது முதல் இடையறாது நடந்துவரும் மனிதப் பிறப்பு என்ற பேரற்புதத்தின் பின்னால் நடப்பவற்றை சற்று சிந்தித்துப்பாருங்கள். இந்த மாபெரும் அற்புதத்தில் பங்குகொள்ளும் உறுப்புகளின் உருவாக்கமும் இயக்கமும் பரிபாலித்தலும் இன்ன பிற விந்தைகளும் படைத்தவன் ஒருவனின்றி நடந்துவிடுமா கூறுங்கள்! நமது ஒவ்வொருவரதும் உருவாக்கத்திற்கும் பின்னால் அமைந்துள்ள இறை அற்புதங்களை அறியும்போது அவனுக்கு நன்றி சொல்லாமல் இருக்கமுடியுமா?

**ஆண் உறுப்பு எனும் அதிசயம்:** விரிந்து சுருங்கும் தன்மையுடைய மெல்லிய தசைகளும் ஏராளமான ரத்தக்குழாய்களும் உள்ளடக்கிய ஆண் உறுப்பு பாலுணர்வு நிறைந்திருக்கும்போது ரத்தம் பாய்வதால் விறைப்படைகிறது. உறவுக்குப் பின் பாலுணர்வு குறைந்ததும், இந்தக் குழாய்களில் ரத்த ஓட்டம் குறைந்துவிடுவதால், பழைய நிலைக்குத் திரும்பிவிடுகிறது.

இந்த உறுப்பின் மத்தியப் பாதைக்குச் சிறுநீர்க்குழாய் (Urethra) என்று பெயர். இது சிறுநீர்ப்பையில் இருந்து வருகிறது. இதன் ஆரம்பப் பகுதியில் விந்து ஏற்றக்குழாய்கள் இணைந்திருக்கும். இது சுமாராக 15 வயது வரை சிறுநீரை மட்டுமே வெளியேற்றுகிறது. அதற்குப் பிறகு விந்துவை வெளியேற்றும் பாதையாகவும் மாறிவிடுகிறது. சிறுநீர் வெளியேறும்போது சிறுநீரும், விந்து வெளியேறும்போது விந்துவும்

மட்டுமே வெளியேறும்படியான ஓர் ஒழுங்குமுறையை கடைப்பிடிப்பது உடலியல் அதிசயங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்று.

**விதைப்பை:** ஆணுறுப்பை ஒட்டிக் கீழ்ப்புறமாக ஒரு விதைப்பை(Scrotum) தொங்குகிறது. இதனுள்ளே இரண்டு விதைகள்(Testicles) உள்ளன. ஆண் பருவ வயதை அடைந்ததும் விந்தணுக்கள் உற்பத்தியாவது இங்குதான். ஆண்மையின் அடையாளமான மீசை வளர்வதற்குக் காரணமான டெஸ்டோஸ்டீரான் ஹார்மோனை உற்பத்தி செய்வதும் இவைதான். வெப்பம், குளிர் போன்ற தட்ப வெப்பநிலைகளிலிருந்து விதைகளைக் காப்பது விதைப்பையின் முக்கிய வேலை.

விதைப்பையின் இரண்டு பக்கத்திலும் உள்ள விதைகளின் மேல் தளத்தில் தலா ஒரு விந்தணுக்குழாய் (Epididymis) உள்ளது. இவற்றிலிருந்து கயிறு போன்ற விந்துக்குழாய்கள் (Vasdeferens) அடிவயிற்றை நோக்கிப் புறப்படுகின்றன. இவை 'புராஸ்டேட்' (Prostate) எனும் ஆண்மை உறுப்பில் உள்ள விந்து ஏற்றக்குழாயில் (Ejaculatory duct) முடிகின்றன.

புராஸ்டேட் என்பது ஆண்களுக்கே உரித்தான ஒரு ஸ்பெஷல் சுரப்பி. இது சிறுநீர்ப்பையின் அடிப்பாகத்தில் இருக்கிறது. இதன் நடுவில் சிறுநீர்ப்பையில் இருந்து கிளம்பும் சிறுநீர்க்குழாய் செல்கிறது. விந்து ஏற்றக்குழாய்கள் இரண்டும் இந்தச் சிறுநீர்க்குழாயில் இணைந்து ஒன்றாகி, சிறுநீர் வெளித்துவாரத்தில் முடிகிறது.

**உயிரணுவின் பயணம்:** விதைகளில் உற்பத்தியாகும் விந்தணுக்கள் ஒன்று சேர்ந்து அணி அணியாக விந்தணு குழாய்க்கு வந்து சேரும். பாலுறவின்போது வெளியேறுவதற்காக இவை இங்கு காத்திருக்கும். பாலுறவின்போது ஏற்படும் தசை இறுக்கங்களால், இவை அடிவயிற்றை நோக்கி, விந்து ஏற்றக்குழாய்க்கு உந்தப்படுகின்றன. சிறுநீர்ப்பைக்குப் பின்னால் விந்துக்கிடங்கு(Seminal vesicle) உள்ளது. விந்தணுக்கள் முதலில் விந்துக்கிடங்கு சுரப்போடும், பிறகு புராஸ்டேட் சுரப்போடும் கலந்து விந்து திரவமாக(Semen) மாறி, விந்து ஏற்றக்குழாய் வழியாக சிறுநீர்க்குழாயை அடைந்து, சிறுநீர் வெளித்துவாரத்தில்(Urethral orifice) வெளியேறுகிறது.

சிறுநீர்ப்பையின் அடியிலுள்ள சுருக்குத் தசைகள் பாலுறவின்போது இறுகுவதால், சிறுநீர்ப்பைக்கும் சிறுநீர்க் குழாயோடு விந்து ஏற்றக்குழாய்கள் இணையும் இடத்துக்கும் இடையில் உள்ள பாதை அடைத்துக்கொள்கிறது. இதன் பலனால், விந்து வெளியேறும்பொழுது அதனுடன் சிறுநீர் கலப்பது தடுக்கப்படுகிறது. அதுபோலவே, விந்து சிறுநீர்ப்பைக்குள் பின்னோக்கிச் செல்வதும் தடுக்கப்படுகிறது.

**பெண் உறுப்புகள் எனும் பேரதிசயம் :**

**1. கருப்பை**(Uterus):

பார்ப்பதற்கு கருஞ்சிவப்பு நிறத்தில் மேற்புறம் பருத்தும், கீழ்ப்பகுதி சிறுத்தும் இருக்கும் முக்கிய உறுப்பு இது. கடுமையான தசைகளால் அமைந்த இந்த 'வீட்டில்'தான் கண்ணுக்குத் தெரியாத புள்ளியாக இருக்கும் கரு, முழுக்குழந்தையாக உருவெடுக்கும் அதிசயம் நடக்கிறது.

விரிவாகச் சொன்னால், கருப்பைக் குழி(Uterine cavity) என்று அழைக்கப்படும் இதன் உட்பரப்பு முக்கோண வடிவத்தில் இருக்கிறது. அதில் மெல்லிய சவ்வுப் படலம் (Endometrium) இருக்கிறது. இதில்தான் கரு புதைந்து வளர்கிறது. கருத்தரிக்காதபோது, இந்தச் சவ்வு விரிசல்விட்டு விலகி, கசியும் இரத்தத்துடன் கலந்து மாதவிடாயாக வெளியேறுகிறது.

**2. கருப்பை வாய்** (Cervix):

கருப்பைக்கான உள்வாசல் இது கருப்பையையும் ஜனனப் பாதையையும் இணைக்கிறது. முட்டையின் வெள்ளைக் கருபோல இங்கே சுரக்கும் ஒருவித திரவம், பெண்களுக்குப் பாலுறவின் மீது ஈடுபாட்டை அதிகப்படுத்தவும், ஆணின் விந்தணுக்கள் வழுக்கிக்கொண்டு கருப்பைக்கு உள்ளே பாய்ந்து செல்லவும் வசதி செய்து தருகிறது.

**3. சினைப்பைகள்**(Ovaries):

கருப்பையின் இரண்டு பக்கமும் இருப்பவை சினைப்பைகள். குழந்தை உருவாவதற்குத் தேவையான சினைமுட்டையை(Ovum) மாதம் ஒன்று வீதம் இடது பக்கம், வலது பக்கம் என ஒன்று மாற்றி ஒன்றாக உற்பத்தி செய்து, கருக்குழாய்க்கு அனுப்பிவைக்க வேண்டியது சினைப்பையின் வேலை. இங்கு சுரக்கும் ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்ட்ரான் ஹார்மோன்கள்தான் பெண்களின் கவர்ச்சிக்கு முக்கிய காரணமாகின்றன.

**4. கருக்குழாய்கள்** (Fallopian tubes):

கருக்குழாய்கள் கருப்பையின் இரண்டு பக்கமும் இருக்கின்றன் சினைப்பையையும் கருப்பையையும் இணைக்கின்றன. தலா 10 செ.மீ. நீளம் உள்ள இந்தக் குழாயின் மேல்முனையில்தான் சினைமுட்டையோடு ஆணின் விந்தணு கலந்து கரு உருவாகும் அற்புதம் நடக்கிறது

**5 ஜனனப் பாதை :** வஜைனா(Vagina) எனப்படும் ஜனனப் பாதைதான் கருப்பைக்கான வெளிவாசல்! குழந்தை பிறப்பின்போது கருப்பையிலிருந்து வெளிவரும் குழந்தையை இந்தப் பூமிக்குத் தருவதற்கு பயன்படும் முக்கிய வழியாக இது இருக்கிறது. இதன் நீளம் சுமாராக 8 செ.மீ. அகலம் 3 செ.மீ. இத்தனை சிறிய துளைதான் நாம் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் பிரசவத்தின்போது அகல விரிந்து பத்து மாதம் ஆன சிசுவுக்கு வழிவிடுகிறது.


**கரு உருவாவது எப்படி?**

ஒரு பெண்ணுக்கு மாதவிலக்கு ஆன நாளிலிருந்து 12-வது நாள் முதல் 17-வது நாள் வரை முக்கியமனவை. ஒரு பெண்ணின் சினைப்பையிலிருந்து சினைமுட்டை வெடித்து வெளிவந்து, இந்த நாட்களில் ஏதாவது ஒருநாளில் கருக்குழாய்க்கு வந்து காத்திருக்கும். வெடித்து வெளிவந்த பின் இரண்டு நாட்களுக்குத்தான் அது உயிரோடு இருக்கும். அதற்குள் ஆணின் விந்துத்திரவம் வந்தடைந்தால்தான் விந்தணு சினைமுட்டையுடன் கலந்து கரு உருவாக முடியும்.

அப்போது ஆணின் விந்துத்திரவம் கருப்பை வாய்க்கு அருகில் கொட்டப்படும்போத இதில் உள்ள கோடிக்கணக்கான விந்தணுக்கள் எப்படியும் சினைமுட்டையை அடைந்தே தீருவது என்று தீர்மானித்து,

அணிவகுத்துச் செல்லும் போர் வீரர்களைப்போல வீராவேசமாகப் புறப்பட்டு கருப்பைக்குள் நுழைவார்கள்.

கருப்பையின் உள் தூரம் 8 செ.மீ.வரை இருக்கும். நிமிடத்துக்கு சராசரியாக 2 மி.மீ.தூரம் என்ற வேகத்தில் நீந்திச் செல்வார்கள். பாதி தூரம் போனதும் பாதி வீரர்கள் களைப்படைந்து பயணத்தை நிறுத்திக்கொள்வார்கள். மீதிப் பேர்தான் பயணத்தைத் தொடர்வார்கள். இவர்கள் மட்டுமே மில்லி மீட்டரில் ஒரு பங்கு அளவே இருக்கும் சினைமுட்டையின் 'கோட்டைக் கதவை' மோதிப்பார்ப்பார்கள். ஆனால், ஏதாவது ஒருவருக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் கிடைத்து 'கோட்டைக் கதவு'




திறந்து வழிவிடும்.

சினை முட்டையை அதிர்ஷ்டக்கார 'மாவீரன்' துளைத்த மறுகணமே, முட்டி மோதும் மற்ற வீரர்கள் உள்ளே நுழைவதைத் தடுக்க, சினை முட்டையின் சவ்வுப் பகுதி இறுகிக் கோட்டைக் கதவைத் தாழ் போட்டு மூடிக்கொள்வது இன்னொரு அதிசயம்.

அந்த 'மாவீரன்' உயிரணுவின் வால் பகுதி சினைமுட்டையின் சவ்வுக்கு வெளியிலேயே நின்றுவிட, நீள்வட்ட தலை மட்டும் உள்ளே போகிறது. சினைமுட்டையில் நடுநாயகமாகக் காத்திருக்கும் அதன் உட்கருவோடு கலந்து ஒரு புதிய உயிர் கருவாக உருவாகும் அற்புதம் அங்கே

அரங்கேறுகிறது! அவ்வாறு இணையும் பொழுது, விந்தணு தன்னிடமுள்ள 23 நிறக்கோல்களையும் (Chromosomes) அவிழ்த்துக் கொட்டி விடுகின்றது. இந்த நிறக்கோல்களில் தந்தை வழி இறங்கக்கூடிய மரபு வழிப் பொருள்கள் யாவும் அடங்கியுள்ளன.

● **நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? நீங்கள் செலுத்துகின்ற இந்த இந்திரியத்துளியைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?** (திருக்குர்ஆன் 56:57-59)

● **நிச்சயமாக நாம் மனிதனைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம்.. பின்னர் நாம் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம் பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம் பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம் பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்.** (திருக்குர்ஆன் 23:12-14)

# நோய் இறை அடியானுக்கு வரம்

இறைவனின் எவல் - விலக்கல்களை ஏற்று அதன்படி வாழ்பவருக்கே அரபு மொழியில் முஸ்லிம் என்று கூறப்படும். அப்படிப்பட்ட மனிதரின் உன்னத நிலை பாருங்கள்:

● ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்கு பதிலாக அவரின் பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு : அபூ ஸயீத் அல்குத்ரீ (ரலி) (புஹாரி : 5641)

**நபிகளாருக்கு காய்ச்சல் கண்டபோது ...**

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காய்ச்சலால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர்களிடம் நான் சென்றேன். ‘இறைத்தூதர் அவர்களே! தாங்கள் கடும் காய்ச்சலால் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களே!” என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், ‘ஆம் உங்களில் இரண்டு மனிதர்கள் காய்ச்சலால் அடைகிற துன்பத்தை (ஒரே மனிதனாகிய) நான் அடைகிறேன்” என்று கூறினார்கள். நான், ‘(இந்தத் துன்பத்தின் காரணமாகத்) தங்களுக்கு இரண்டு (மடங்கு) நற்பலன்கள் கிடைக்கும் என்பதாக இதற்குக் காரணம்?’ என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், ‘ஆம் அது அப்படித்தான். ஒரு முஸ்லிமைத் தைக்கும் ஒரு முள்ளாயினும், அதற்கு மேலான துன்பம் எதுவாயினும் அதற்கு பதிலாக, மரம் தன் இலைகளை உதிர்த்து விடுவதைப் போன்று அவரின் பாவங்களை அல்லாஹ் (உதிரச் செய்து) மன்னிக்காமல் விடுவதில்லை” என்று கூறினார்கள். அறிவிப்பு : இப்னு மஸ்ஊது (ரலி). (புஹாரி)

# கருவியலைத் திருத்திய குர்ஆன் வசனங்கள்

அறிவுலகின் தந்தை என்றும் கிரேக்கத் தத்துவ ஞானி என்றும் போற்றப்படும் அரிஸ்டாட்டில் (கி.மு. 384 & 322) கூட மாதவிடாய் இரத்தத்தில் இருந்துதான் மனிதன் படைக்கப்பட்டான் என்று கூறிக் கொண்டிருந்தார். இந்திரியத் துளியில் ஒழிந்திருக்கும் குட்டி மனிதன்தான் கருவறைக்குள் சென்று வளர்ந்து குழந்தையாக வெளியேறுகிறான் என்று ஒரு பிரிவினர் கூறிக் கொண்டிருக்க, மற்றொரு பிரிவினரோ அந்த குட்டி மனிதன் 'சினை முட்டையில்'தான் மறைந்திருக்கின்றான் என்று கூறிவந்தனர். 17ம் நூற்றாண்டு வரை கருவியல் கோட்பாடு இவ்வாறுதான் இருந்தது.

அறிவியல் வளர்ச்சி மனிதகுலத்தின் கண்களைத் திறந்துவிட புதுப்புது உண்மைகள் புலனாக ஆரம்பித்தன. மனித கருவியலைப் பொறுத்தவரையில் அல்குர்ஆன் மகத்தான பங்காற்றியது. மனித உருவாக்கம் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் அறிவியல் உலகின் திருப்பு முனையாயின. அதிலும் குறிப்பாக 'அலக்' எனும் பதம் கருவியல் உலகில் பெரும் புரட்சிக்கே வித்திட்டது.

திருக்குர்ஆன் அத்தியாயம் 23: 12-14 வசனங்களில் கீழ்கண்ட உண்மைகளை இறைவன் கூறுவதைக் காணலாம்:

**1. நிச்சயமாக மனிதனை களி மண்ணின் மூலத்திலிருந்து நாம் படைத்தோம். பின்னர் பாதுகாப்பான ஓரிடத்தில், அவனை விந்தாக நாம் ஆக்கினோம்.**

**2. பின்னர், இந்த இந்திரியத்தை 'அலக்'காக படைத்தோம்**

**3. பின்னர், அந்த அலக்கை தசைத் துண்டாகப் படைத்தோம்.**

**4. பின்னர், அந்தச் தசைத் துண்டை எலும்புகளாகப் படைத்தோம்.**

**5. பின்னர், அவ்வெலும்புகளுக்கு சதையை அணிவித்தோம்.**

**6. பின்னர், அவனை வேறொரு படைப் பாக (முழு மனிதாக) உண்டாக்கினோம்.....**

ஆண் உயிரணுவும், பெண் சினை முட்டையும் சேர்ந்து 'ஸைகோட்' எனும் புதிய செல் உருவாகிறது. மனித கருவின் ஆரம்பம் இந்த ஸைகோட்டில் இருந்துதான் தொடங்குகிறது. 'கலப்பு இந்திரியத்திலிருந்து நாம் மனிதனைப் படைத்தோம்' என்று கீழ்கண்ட வசனம் குறிப்பிடுவது இதனைத்தான்.

● **(பின்னர் ஆண், பெண்) கலப்பான இந்திரியத் துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம் - அவனை நாம் சோதிப்பதற்காக அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம். (திருக்குர்ஆன் 76:2)**

அல்குர்ஆன் இறக்கியருளப்பட்டு சுமார் 1300 ஆண்டுகளுக்குப் பிறகு கருவியலில் 'கலப்பு இந்திரியம்' என்ற கட்டம் இருப்பதாக ஹெர்ட்விக் என்பவரால் 1875ம் ஆண்டில்தான் கண்டுபிடிக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'கலப்பு இந்திரியம்' தன்னுடைய பலவித பரிமாணங்களுடன் கருவின் குழாய் வழியாக கருவகத்தை நோக்கி திரவப் பந்தின் வடிவமைப்பைப்

பெற்று நகர்கிறது. அப்போது அதன் 'செல்கள்' பன்மடங்காகப் பெருகுகின்றன. இருந்தாலும் கூட கற்பப் பையின் உள்வரிச் சவ்வில் தன்னைப் பதித்துக் கொள்ளும் வரை திரவப் பந்தின் வடிவத்தையே கொண்டிருக்கின்றது.

இதைத் தொடர்ந்து 'கலப்பு இந்திரியம்' என்ற நிலையிலிருந்து 'அலகா' எனும் புதிய நிலைக்கு மாறுகிறது.

**'அலக்' என்பது என்ன?**

'அலக்' என்பது 'அலகா' எனும் வார்த்தையின் பன்மைச் சொல்லாகும். அலகா என்பதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. அந்த மூன்று பொருள்களும் 'அலகா'வின் நிலைக்கு பொருந்திப் போவது இறைவனின் வல்லமையையும் நுண்ணறிவையும் நினைவூட்டுகின்றன. திருக்குர்ஆன் வசனங்கள் அறிவியல் வல்லுனர்களையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

**1. பற்றிப் பிடித்து தொங்குதல்** (Implantation): நீர்த் துளி வடிவில் உள்ள கலப்பு இந்திரியம் ஏழாவது நாளில் கருப்பையினுள் நுழைகிறது. கருப்பையினுள் ஒரு பாதுகாப்பான இடத்தை தேர்வு செய்து அதன் உள்வரிச் சவ்வில் தன்னை ஆழப்பதித்து, தொங்கத் தொடங்குகிறது.

**2. இரத்தம், கருஞ்சிவப்பு இரத்தம், உறைந்த இரத்தம்:** தொங்கிக் கொண்டிருக்கும் கரு, அதன் மூன்றாவது வாரத்தின் இடையே இரத்தத்தால் நிரப்பப்பட்டு, மூடப்பட்டுள்ள நாளங்களைக் கொண்டதாக உருமாறுகிறது.

**3. அட்டைப்பூச்சி :** குளங்களில் வாழ்ந்து உயிர்ப் பிராணிகளைப் பற்றிப்பிடித்து, அதன் இரத்தத்தை உட்கொள்ளும் அட்டைப் பூச்சியோடு, நிரப்பப்பட்ட இரத்த நாளங்களுடன் தொங்கிக் கொண்டிருக்கும் கரு, அதன் மூன்றாவது வார இறுதியில், தோற்றத்திலும் இரத்தத்தை உறிஞ்சும் போது பிராணிகளை உறுதியாகப் பற்றிப்பிடித்துக் கொள்வதிலும் முழுமையாக ஒத்துப் போகிறது.



அட்டைப்பூச்சி

வெளித் தோற்றத்தில் அட்டைப் பூச்சியைப் போன்றும், உட்புறத்தில் இரத்தம் நிரப்பப்பட்ட நாளங்களைக் கொண்டதாகவும் இருக்கும் 'அலகா' கருவறையில் தன்னை ஆழப்பதித்து தொங்கிக் கொண்டிருகின்றது என்பதுதான் அலகாவின் முழுமையான விளக்கமும் பொருளுமாகும்.

கிருத்துவ மதத்தைச் சேர்ந்த மருத்துவ ஆய்வாளர்கள் டாக்டர் கீத் மூர், மாரீஸ் புகைல், டாக்டர் ஜோ. லே ஸிம்சன் போன்றவர்களை திருக்குர்ஆனின் அற்புத வசனங்கள் வியப்பில் ஆழ்த்தின.

**டாக்டர் கீத் மூர் மேற்கொண்ட ஆய்வுகள்**

கனடாவில் டொரண்டோ பல்கலைக் கழகத்தில் உடற்கூறு துறைத் தலைவராகவும், கருவியல் துறைப் பேராசிரியராகவும் இருந்த டாக்டர் கீத்

மூர் 'அலக்' எனும் ஒரு கட்டத்தை மனிதக் கரு அடைகிறது என அல்குர்ஆன் கூறுவதை அறிந்து வியந்து போனார்.

அது பற்றி விரிவாக ஆய்வு செய்த அவர், கருவின் படத்தை ஒரு அட்டைப் பூச்சியின் படத்துடன் ஒப்பிட்டு, கருவின் ஆரம்பத்தோற்றமும் அதன் செயல்பாடுகளும் அட்டைப்பூச்சியின் தோற்றமும் அதன் செயல்பாடுகளும் ஒரேவிதமாக இருந்ததைக் கண்டு வியந்து போன அவர், மேலும் இத்துறையில் தொடர்ந்து ஆய்வுகள் செய்யலானார். ஏனெனில், ஆரம்ப நிலைக்கரு அட்டைப் பூச்சிபோன்றதென இதற்குமுன் கீத்மூர் அறிந்திருக்கவில்லை. இது இத்துறையில் அவரை மேலும் ஆயுவுகள் செய்யத் தூண்டியது.



விலங்கியல் துறைக்குச்சென்று அட்டைப் பூச்சியை எடுத்து வந்து மனிதக் கருவுக்கு ஒப்பிட்டுக் காட்டினார். இரு போட்டோக்களையும் வெளியிட்டு அல்குர்ஆன் வாயிலாக தான் அறிந்த உண்மையை உலகுக்கு தெரிவித்து மகிழ்ந்தார்.

அரபியரிடத்தில் 'அலக்' என்பதின் பொருள் உறைந்த இரத்தம் என்பதாகும் என்று அவரிடம் கூறப்பட்டபோது டாக்டர் கீத் மூர் திகைத்துவிட்டார். 'குர்ஆனில் சொல்லப்பட்டது கருவின் வெளித் தோற்றத்திற்கான நுட்பமான வர்ணனையாக மட்டும் அல்ல! மாறாக கருவின் உட்புற உருவாக்கத்திற்கான தெளிவான வர்ணனையாகக் கூட இருக்கிறது. ஏனெனில் 'அலக்' உடைய கட்டத்தில் நுட்பமான நாளங்களில் இரத்தமானது மூடப்பட்டதாக அமைந்திருக்கின்றது என்றார்.

கனடா நாட்டு நாளேடுகளின் தலைப்புச் செய்தியாகவே இது இடம் பெறலாயிற்று. அதில் ஒரு நாளேடு 'பழங்காலப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஆச்சரியப்படத்தக்க செய்தி' என்று தலைப்பிட்டிருந்தது.

மனிதக் கண்களால் நேரடியாக காண முடியாத அளவுக்கு கருவின் ஆரம்பத் தோற்றங்கள் மிக நுட்பமானவை. மைக்ரோஸ்கோப் உதவியுடன்தான் ஒருவர் இவற்றைப் பார்க்க முடியும். சுமார் 200 வருடங்களுக்கு முன்புதான் இக்கருவி கண்டுபிடிக்கப்பட்டது.

"கருவளர்ச்சி குறித்து நம் கண் முன்னே உள்ள சிலேடுகளும் படங்களும் ஆகிய அனைத்துமே மைக்ரோஸ்கோப் உதவியுடன் படம் பிடிக்கப் பட்டவை. 14 நூற்றாண்டுகளுக்கு முன்பு கரடு முரடான அறுவை சிகிச்சை செய்து கருவின் வளர்ச்சிப் படிகளை ஒருவர் காண முயன்றிருந்தால் கூட, அவற்றை அவரால் கண்கூடாகப் பார்த்திருக்க முடியாது" என்றார் டாக்டர் கீத் மூர்.

கருவளர்ச்சியின் படித்தரங்களின் விளக்கங்களை இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பிருக்கிறதா? என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, அதற்கு சாத்தியமே இல்லை. ஏனென்றால் கரு படிப்படியாக உருவாக்கப்படுகிறது என்பதை அன்றைய முழு உலகமும் அறிந்திருக்கவில்லை என்றார்.

அதனைத் தொடர்ந்து அல்குர்ஆனிலும் நபிமொழியிலும் கருவியல் தொடர்பாக சுமார் 80 விஞ்ஞான உண்மைகளைத் திரட்டினார். தான் ஏற்கனவே எழுதி வெளியிட்டிருந்த கருவில் உருவாகும் மனிதன் எனும் நூலில் இத்தகவல்களை இணைத்து அதன் மூன்றாம் பதிப்பாக 1982ல் வெளியிட்டார். மருத்துவத் துறையில் மிகச் சிறந்த நூல் என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்த அந்த நூல், கருவியல் துறையில் முக்கியப் பாடநூலாக முதலாமாண்டு மருத்துவ மாணவர்களுக்கு பயன்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கது.

1981ல் சவூதி அரேபியா, தம்மாமில் நடந்த ஏழாவது மருத்துவ மாநாட்டில் ‘அல்குர்ஆன் இறை வேதம்தான் என்பதற்கும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என்பதற்கும் ‘அலக்’ ஒரு மகத்தான அத்தாட்சி என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

# வாசகர் எண்ணம்

● அக்டோபர் 17 இதழில் “வேர்களை கொல்லும் விழுதுகள்“ என்ற தலைப்பில் வெளியாகி இருந்த செய்திகள் அதிர்ச்சியளிப்பவையாக உள்ளன. முக்கிய ஊடகங்கள் தினசரி வார மாத இதழ்கள் இந்த அவலத்தை மூடி மறைத்துவிட்டன போலும். இம்மையை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் நவீன உலகம் இதுபோன்ற அவலங்களுக்கு உடனடி தீர்வுகாண முயல வேண்டும். பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள் குறிப்பாக அவர்களது முதுமைப் பருவத்தில் தேவைப்படும் கவனிப்புகள் பற்றி போதிய விழிப்புணர்வை சமுதாயம் பெற வேண்டும்.

- **கே எஸ் ஏ கான், சென்னை**

● நவம்பர் மாத இதழ் பறறி... உடல் நலத்தை வலியுறுத்தும் , இறையருளின் பண்புகளை விரித்துணர்த்தும் சிறப்பிதழ் அருமை. அறிவியல் விழிப்புணர்வையும் தந்த விதம் மிகச் சிறப்பு. ஒவ்வொரு இதழையுமே ஒரு பொருளின் தொகுப்பாக திரட்டித்தரும் தங்களின் சமூக நோக்கு விழிப்புணர்வு வணங்கத்தக்கது. இவ்விதழில் வழக்கத்தை விட ஒவ்வொரு பக்கமும் தேர்ந்த மன நிறைவை சிறியோனான எனக்கும் ஏற்படுத்தியதை குறிப்பிட்டே ஆக வேண்டும்.வாழ்க வளமுடன்.

- **தஞ்சை என்.ஜே. கந்தமாறன், சென்னை**

● இங்கு நடைபெற்ற புத்தக கண்காட்சியில் தங்கள் திருக்குரான் நற்செய்தி மலர் புத்தகம் ஜூலை ஆகஸ்ட், செப்டம்பர் மாத இதழ்கள் உள்பட சில புத்தகங்கள் வாங்கி வந்தோம். ஆர்வம் ஊட்டுபவையாக உள்ளன. தமிழில் இஸ்லாம்“ சம்பந்தப்பட்ட புத்தகங்கள் தங்களுக்கு விருப்பம் இருப்பின் எனது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நன்றி.

- **V.G.இளங்கோவன் , விழுப்புரம்**

● பயனுள்ள விழிப்புணர்வு கட்டுரைகள் உங்கள் மூலமாக சமூகத்திற்குக் கிடைக்கின்றன. இறைவன் உங்கள் இதழ் மூலமாகப் பேசுவதாகவே உணர்கிறேன்.

- **கிருஷ்ணமூர்த்தி, மல்லேஸ்வரம், பெங்களூர்.**


# தாய்ப்பாசம் என்ற இறை அற்புதம்

**● மனிதனே! அருட்கொடையாளனாகிய உன் இறைவனைக் குறித்து உன்னை ஏமாற்றத்தில் வீழ்த்தியது எது? அவனே உன்னைப் படைத்தான் உன்னைக் குறைகள் எதுவுமின்றிச் செம்மைப்படுத்தினான் உனக்குப் பொருத்தமான உறுப்புகளை அளித்தான். மேலும், தான் நாடிய உருவத்தில் உன்னை ஒருங்கிணைத்து உண்டாக்கினான். (திருக்குர்ஆன் 82: 6-8)**

இறைவனே இல்லையென்று மறுக்கும் நாத்திகர்களை இடறி விழச்செய்யும் விடயம் தாய்ப்பாசம் என்பது. எல்லாம் தற்செயல் என்றால் இது யார் செயல்? கடவுளை எப்படியாவது மறுக்க வேண்டும் என்ற பிடிவாதத்தின் காரணமாக எவ்வளவு உண்மைகளை அவர்கள் மறுக்கவேண்டி உள்ளது பாருங்கள்! உயிரின் உருவாக்கம், உயிரினங்களோடு பின்னிப்பிணைந்து காணும் உணர்வுகள், அன்பு, பாசம், கோபம் போன்ற பலவற்றுக்கும் காரணம் கற்பிக்க எவ்வளவு அறிவுக்குப் பொருந்தாத ஊகங்களை கற்பனை செய்து புனைய வேண்டி உள்ளது அவர்களுக்கு!



ஒரு மனிதத் தாய் தன் குழந்தையோடு காட்டும் பாசமாயினும் சரி ஒரு தாய் மிருகம் அல்லது பறவை தன் குஞ்சோடு காட்டும் பாசமாயினும் சரி நாத்திகக் கண்ணோட்டப்படி புதிர் மிக்கது. ஒரு பழுவான, தொடர்ந்து இடையறாது தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு வஸ்துவை பலகாலம் வயிற்றில் சுமந்து கொண்டிருந்த யாராயினும் அது வெளியில் வந்ததும் அதனை தூரமாக வீசிஎறிந்துவிட்டு வேறு வேலை பார்க்கவே விரும்புவார்கள். ஆனால் பிறப்பு என்று வரும்போது அங்கு நடப்பது நேர் முரணானது! தாய் ஜீவி தன் வயிற்றிலிருந்து வெளிவந்த அந்த வஸ்துவை வாரி அரவணைக்கிறது! பாதுகாத்துப் பரிபாலிக்கிறது! இவ்வாறு தன் குஞ்சின் மீது காட்டப்படும் பாசத்தை அந்த தாய்க்குள் யார் விதைத்தது? இந்தத் தாய்ப்பாசம் மட்டும் தாய்க்குள் விதைக்கப் படாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். ஒவ்வொரு தாயும் தன் குஞ்சை வீசியெறிந்து விட்டு அதைவிட்டும் அகன்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? இனப்பெருக்கம் ஆரம்பம் முதலே தடைபெற்றிருக்கும்!



உலகம் உருவானதும் தற்செயல், அதில் உயிரின் உருவாக்கமும் தற்செயல், உயிர்களிடையே விதைக் கப்பட்டுள்ள தாய்ப்பாசமும் தற்செயல் என்பன போன்ற அறிவுக்குப் பொருந்தாத வாதங்களுக்கு எப்படித்தான் இவர்கள் பகுத்தறிவுச் சாயம் பூசுகிறார்களோ தெரிய வில்லை!

## இறைவன் விதைத்ததே தாய்ப்பாசம்

ஆம், இறைவனின் உள்ளமையையும் தன் படைப்பினங்கள் மீது அவன் கொண்ட அளவிலாக் கருணையையும் பறைசாற்றுவதாக தாய்ப்பாசம் விளங்குகிறது. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய நம் இறைவனின் கருணையின் வெளிப்பாடே தாய்ப்பாசம் என்பது. இறைவன் விதைத்ததே தாய்ப்பாசம் என்பது.



● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறைவன் அன்பை நூறு பாகங்களாகப் பங்கிட்டான். அவற்றில் தொண்ணூற்று ஒன்பது பாகங்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டான். (மீதியிருக்கும்) ஒன்றையே பூமியில் இறக்கினான். இந்த ஒரு பங்கினால்தான் படைப்பினங்கள் ஒன்றன் மீதொன்று பாசம் காட்டுகின்றன. எந்த அளவுக்கென்றால், மிதித்துவிடுவோமா என்ற அச்சத்தால் பிராணி தனது குட்டியைவிட்டுக் கால்குளம்பைத் தூக்கிக்கொள்கிறது.

இதை நபித்தோழர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி 5311 )

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:



அன்பின் நூறு பாகங்களும் இறைவனுக்கே உரியவையாகும். அவற்றில் ஒன்றை மனிதன், ஜின், மிருகங்கள், ஊர்வன ஆகியவற்றுக் கிடையே இறக்கினான். இந்த ஒரு பங்கினால் தான் அவை ஒன்றன் மீதொன்று பாசம் கொள்கின்றன் பரிவு காட்டுகின்றன. அதன் மூலம்தான் காட்டு விலங்குகூட தன் குட்டிமீது பாசம் காட்டுகிறது. (அவற்றில்) தொண்ணூற்று ஒன்பது பாகம் அன்பை இறைவன் ஒதுக்கி வைத்துள்ளான். அவற்றின் மூலம் மறுமை நாளில் தன் (நல்ல) அடியார்களுக்கு (விஷேசமாக) அன்பு காட்டுவான்.

இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி5312)

**● இன்னும் அல்லாஹ்வின் அரு(ட் கொடைக)ளை நீங்கள் கணக்கிட்டால், அவற்றை (வரையறை செய்து) நீங்கள் எண்ணி முடியாது! நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், மிகக் கருணையுடையோனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 16:18)**

**● "என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய கருணையில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் - நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் - நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்கக் கருணையுடையவன்" (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் 39:53)**


# பாசத்தலைவன் பசியாறுவது எப்போது?

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மனிதரை அவரின் முகத்தையோ உருவத்தையோ கண்ணால் காணாமலேயே உலக மக்கள்தொகையின் கால்வாசிக்கும் அதிகமான நபர்கள் உளமாற நேசிக்கிறார்கள் என்றால் அவர் எப்படிப்பட்ட மாமனிதராக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். பதினான்கு நூற்றாண்டுகளாக உலகெங்கும் மக்கள் தங்களைப் பிணைத்திருந்த இனம் நிறம் ஜாதி போன்ற அடிமைத்தளைகளிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்கவும் மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அனுபவிப்பதற்கும் காரணமாக அமைந்தவர் அவர் என்றால் அவர்மீது இவ்வளவு மக்கள் நேசம் கொள்வது இயற்கையான ஒன்றுதானே. இவ்வுலகைப் படைத்த இறைவனே அவருக்கு சான்றிதழ் வழங்குகிறான்:

- **68:4. மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்.**

நிலைமை இப்படியென்றால் அவரைக் கண்ணால் கண்டு அவரோடு வாழ்ந்தவர்கள் எவ்வாறு நேசித்திருப்பார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். அந்த நற்குண நாயகர் அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டார். அவர்கள் கவலைப் படுவது கண்டு துயரமுற்றார். அதேபோல அந்த மக்களும் அவரது உயிருக்குயிராக நேசித்தார்கள். தங்கள் பாசத்தலைவனின் துன்பம் கண்டு துயரமுற்றார்கள். அக்காலத்தில் நடந்த ஒரு நிகழ்வைத்தான் இங்கு காண இருக்கிறோம்.

## பசியறிந்து பரிமாற நினைத்த தோழர்



பசியும் பஞ்சமும் ஏழைகளை வாட்டிய காலம் அது. அன்று சிறுவராக இருந்த நபித்தோழர் அனஸ் இப்னு மாலிக்(ரலி) அந்த சம்பவத்தைக் கூறுகிறார்கள்:

என் தந்தை அபூ தல்ஹா (ரலி) தாயார் உம்மு சுலைம் (ரலி) அவர்களிடம், "நான் நபி(ஸல்) அவர்களின் குரலைப் பலவீனமானதாகக் கேட்டேன். அதில் நான் (அவர்களுக்கு இருக்கும்) பசியை அறிந்துகொண்டேன். உன்னிடம் (உணவு) ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார்கள். எனவே, உம்மு சுலைம்(ரலி) வாற்கோதுமை ரொட்டித் துண்டுகள் சிலவற்றை எடுத்து வந்தார்கள். பிறகு, உம்மு சுலைம் அவர்கள் தங்களின் முகத்திரை ஒன்றை எடுத்து அதன் ஒரு பகுதியால் ரொட்டியைச் சுருட்டி என்னுடைய கைக்குக் கீழே மறைத்து வைத்துவிட்டு, மற்றொரு பகுதியை எனக்கு மேல்துண்டாக ஆக்கினார்கள்.

பிறகு என்னை இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் அனுப்பினார்கள். நான் அதைக் கொண்டு சென்றேன். இறைத்தூதர்(ஸல்) அவர்களைப்

பள்ளிவாசலில் கண்டேன். அவர்களுடன் மக்களும் இருந்தனர். நான் அவர்களுக்கு முன்னால் (போய்) நின்றேன்.

அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் “உன்னை அபூ தல்ஹா அனுப்பினாரா?“ என்று கேட்டார்கள். நான், “ஆம்“ என்று சொன்னேன். “உணவுடனா அனுப்பியுள்ளார்?“ என்று அவர்கள் கேட்க, நான் “ஆம்“ என்றேன்.

அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தம்முடன் இருந்தவர்களிடம், “எழுந்திருங்கள்“ என்று சொல்லிவிட்டு நடக்கலானார்கள். நான் அவர்களுக்கு முன்னால் நடந்தேன். இறுதியில் அபூதல்ஹா(ரலி) அவர்களிடம் வந்(து விவரத்தைத் தெரிவித்)தேன்.

உடனே அபூ தல்ஹா(ரலி) என் தாயாரிடம் “உம்மு சுலைமே! இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மக்களுடன் வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு உணவளிக்க நம்மிடம் உணவு இல்லையே!“ என்று கூறினார்கள். என் தாயார் உம்மு சுலைம்(ரலி), “இறைவனும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள்“ என்று கூறினார்கள். உடனே அபூ தல்ஹா(ரலி) தாமே நபி(ஸல்) அவர்களை முன்சென்று வரவேற்பதற்காகப் போய் இறைத்தூதர்(ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள். அபூ தல்ஹா அவர்களும் இறைத்தூதர்(ஸல்) அவர்களும் வந்து வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

## அண்ணலார் மூலம் அற்புதம்

இறைத்தூதர்(ஸல்) அவர்கள், “உம்மு சுலைமே! உன்னிடமிருப்பதைக் கொண்டுவா!“ என்று கூறினார்கள். உடனே உம்மு சுலைம் அவர்கள் அந்த ரொட்டியைக் கொண்டு வந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அதைத் துண்டு துண்டாகப் பிய்க்கும்படி பணித்தார்கள். அவ்வாறே அது பிய்க்கப்பட்டது. பிறகு, உம்மு சுலைம்(ரலி) தோல் பையிலிருந்து வெண்ணெய் எடுத்துப் பிழிந்து அதை உருக்கினார்கள். பிறகு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இறைவன் நாடிய (பிஸ்மில்லாஹ் மற்றும் இதர பிரார்த்தனை வரிகள் சில)வற்றைக் கூறினார்கள். பிறகு “பத்துப் பேருக்கு (உள்ளே வர) அனுமதியுங்கள்“ என்று (அபூ தல்ஹாவிடம்) கூறினார்கள்.

அவ்வாறே அவர்களுக்கு அபூ தல்ஹா(ரலி) அனுமதியளித்தார்கள். அப்போது அவர்கள் (பத்துப் பேரும்) வயிறு நிரம்பும் வரை உண்டுவிட்டு வெளியேறினார்கள். பிறகு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் “இன்னொரு பத்துப் பேருக்கு (உள்ளே) வர அனுமதி அளியுங்கள்“ என்று கூறினார்கள். அவ்வாறே அபூ தல்ஹா(ரலி) அனுமதியளிக்க, அவர்களும் வயிறு நிரம்பும் வரை உண்டுவிட்டு வெளியேறினார்கள். பிறகு, “மேலும் பத்துப் பேருக்கு அனுமதியுங்கள்“ என்று கூற, அபூ தல்ஹாவும் அனுமதியளித்தார்கள். அவர்களும் வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டு வெளியேறினார்கள். பிறகு பத்துப் பேருக்கு அபூ தல்ஹா(ரலி) அனுமதி கொடுத்தார்கள். மக்கள் அனைவரும் (இவ்வாறே) வயிறு நிரம்பும் வரை உண்டார்கள். (அப்படி உண்ட) அந்த மக்கள் எண்பது பேர் ஆவர்.

*(ஆதாரம்: புஹாரி எண் 5381)*

ஆம் மக்களின் பாசத்தலைவன் தன் பசியை ஆற்றும் முன் தம்

மக்களைப் பசியாறச் செய்தார்கள். தன் நேசத்துக்குரிய தன் தூதருக்கும் அவர்தம் நேசர்களுக்கும் அகிலம் படைத்த இறைவன் அற்புதமான முறையில் அற்ப அளவில் இருந்த அந்த உணவிலும் அருள்வளம் செய்து அவர்களுக்கு உதவினான். இதுபோன்ற அற்புத நிகழ்வுகள் அண்ணலாரின் வாழ்வில் பல சந்தர்பங்களில் நிகழ்ந்துள்ளன. இவ்வுலகம் என்ற அற்புதக் குவியலுக்கு முன்னால் இந்த அற்புதங்கள் அற்பமானவையே என்பதை சிந்திப்போர் அறியலாம்.

● **2:117. (அல்லாஹ்) வானங்களையும், பூமியையும் முன் மாதிரியின்றி (இல்லாமையிலிருந்து), தானே உண்டாக்கினான் அதனிடம் “குன்” - ஆகுக- என்று கூறினால், உடனே அது ஆகிவிடுகிறது.**

● **36:82. எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்” (ஆய்விடுக) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.**

# நமது சம்பாத்தியம் அனுமதிக்கப்பட்டதா இல்லையா?

நாம் ஒவ்வொருவரும் சுயப்பரிசோதனை செய்யக் கடமைப்பட்டுள்ளோம். தமது குடும்பத்திற்காக உழைப்பவர்கள், தாம் ஈட்டும் பொருளாதாரம் ஹலாலானதா (அனுமதிக்கப்பட்டதா) இல்லையா என்பதை யோசிக்க வேண்டும். இறைவன் தடை செய்த வழிகளில் பொருளாதாரத்தை தேடினால் அதற்கு இறைவனிடமிருந்து தண்டனையும் கிடைக்கும், நம்முடைய பிரார்த்தனைகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

● ஒருமுறை இறைத் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்... “அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானதைத் தவிர வேறு எதையும் அவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். அல்லாஹ் நபிமார்களுக்கு எதை ஏவினானோ அதையே விசுவாசிகளுக்கும் ஏவுகின்றான் என்று கூறி விட்டு,

● **“தூதர்களே! தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நல்லறம் செய்யுங்கள்! நீங்கள் செய்வதை நான் அறிந்தவன்“ (அல்குர்ஆன் 23:51)**

● **“நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குவோராக இருந்தால் அவனுக்கே நன்றி செலுத்துங்கள்!“ (அல்குர்ஆன் 2:172)**

ஆகிய இறைவசனங்களை ஓதிக் காட்டினார்கள்.

பின்பு ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிட்டார்கள். “அவனோ நீண்ட தூரம் பயணத்தில் இருக்கின்றான். அவனுடைய தலை புழுதி படிந்து பரட்டையாக இருக்கின்றது. அவன் வானத்தின் பால் கைகளை உயர்த்தி, எனது இறைவனே! எனது இறைவனே! என்று அழைக்கின்றான். அவனது ஆடை, அவனது உணவு, அவனது குடிப்பு ஆகிய அனைத்தும் ஹராமாக இருக்கின்றது. அவனே ஹராமில் மூழ்கி விட்டான். இந்த நிலையில் அவனது துஆ (பிரார்த்தனை) எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: (முஸ்லிம்)

# இறைவன் அல்லாதவற்றை வணங்குவோரின் நிலை

உடல், பொருள் ஆவி என அனைத்தையும் கொடுத்து இவ்வுலகுக்கு அனுப்பியுள்ள உண்மை இறைவனை - இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவனை- கண்டுகொள்ளாமல் தான்தோன்றித்தனமாக அவன் அல்லாதவர்களையும் அல்லாதவற்றையும் கடவுளாக பாவித்து வணங்கும் செயல் பூமியில் பல குழப்பங்களுக்கும் தீய விளைவுகளுக்கும் பாவங்கள் பெருகுவதற்கும் காரணமாகிறது. இவ்வாறு படைத்த இறைவனை விட்டுவிட்டு அவன் அல்லாதவர்களை வணங்கும் செயல் இணைவைத்தல் எனப்படும்.

● உண்மை இறைவனைப்பற்றிய மரியாதை உணர்வு (seriousness) மனித உள்ளங்களில் இருந்து அகன்றுபோவதால் இறையச்சம் - அதாவது இறைவனுக்கு நான் பதில் சொல்லியாகவேண்டும் என்ற பொறுப்புணர்வு மறைந்து போகிறது. அதனால் பாவங்களில் மக்கள் துணிந்து ஈடுபடுகிறார்கள். சமூகத்தில் பாவங்கள் பெருகவும் அதர்மம் ஆளவும் இது முக்கிய காரணம் ஆகிறது.

● படைத்த இறைவனை நேரடியாக வணங்குவது என்பது எளிதானது, பொருட்செலவு இல்லாதது. ஆனால் அவன் அல்லாதவற்றை மக்கள் வணங்க முற்படும்போது இடைத்தரகர்கள் எளிதாக அங்கு நுழைந்து விடுகிறார்கள். அவரவர் கற்பனையில் உருவானவற்றைக் காட்டி இதுவே கடவுள் என்று கற்பித்து அதன்மூலம் மக்களை சுரண்ட இச்செயல் காரணமாகிறது.

● பல்வேறு மக்கள் அவரவர் கற்பனைக்கேற்ப கடவுளை சித்தரித்து வணங்கும்போது அதற்கேற்ப அவற்றை வழிபடுவோரும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் ஏற்றதாழ்வு பாராட்டுவதற்கும் அடித்துக் கொள்வதற்கும் காரணமாகிறது.

● இன்னும் அகிலங்களின் அதிபதியும் சர்வவல்லமை கொண்டவனுமாகிய இறைவனை சிறுமைப்படுத்தும் செயலும் அவனுக்கு செய்நன்றி கொல்லும் செயலும் பொய்யுரைத்தலும் ஆகும்.

இதை மிகப்பெரிய பாவம் என்று கூறுகிறது குர்ஆன். மேலும்,

● **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (திருக்குர்ஆன் 5:72)**

(அல்லாஹ் என்றால் வணங்குவதற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம்புகுவார். அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)

**இப்பாவத்தை செய்வோரின் நிலை மறுமையில் எவ்வாறு**

## இருக்கும்?

மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று இந்த பூமியில் வாழ்ந்து மறைந்த அனைத்து மனிதர்களும் விசாரணைக்காக மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அதில் இணைவைத்து வணங்கியவர்களும் இருப்பார்கள். யாரை இவர்கள் கடவுளாக பாவித்து அவர்களின் உருவச்சிலைகளை வைத்து வணங்கினார்களோ அவர்களும் அங்கு இருப்பார்கள். இன்னும் சிலர் இறந்துபோன நல்லடியார்களின் சமாதிகள் (உதாரணமாக தர்கா) அருகே நின்று அவர்களை அழைத்துப் பிரார்த்தித்து இருக்கலாம் அவர்கள் யாவரும் அன்று விசாரணையின்போது வருவார்கள். இன்ன பிற இணைவைக்கப்பட்ட மற்ற அனைத்தும் விசாரணையின்போது ஆஜர். அப்போது என்ன நடக்கும் என்பதை இறைவன் தன் திருமறையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கிறான்:

● **10:28. (இன்னும் - விசாரணைக்காக) நாம் அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் நாளில் இணைவைத்தவர்களை நோக்கி: "நீங்களும், நீங்கள் இணைவைத்து வணங்கியவையும் உங்கள் இடத்திலேயே (சிறிது தாமதித்து) இருங்கள்" என்று சொல்வோம் பின்பு அவர்களிடையேயிருந்த தொடர்பை நீக்கிவிடுவோம் - அப்போது அவர்களால் இணை வைக்கப்பட்டவைகள் "நீங்கள் எங்களை வணங்கவேயில்லை" என்று கூறிவிடும்.**

● **10:29. "நமக்கும் உங்களுக்குமிடையே சாட்சியாக அல்லாஹ் போதுமானவன் நீங்கள் எங்களை வணங்கியதைப் பற்றி நாங்கள் எதுவும் அறியோம்" (என்றும் அவை கூறும்).**

இவ்வுலகில் வாழ்ந்திருந்தபோது கண்மூடித்தனமாக நம்பியிருந்த கடவுளர்களின் உண்மை நிலை அவர்களுக்குப் புரியவரும். இவ்வுலக வாழ்க்கை தற்காலிகமானது என்பதும் மறுமை என்பதே உண்மையானது நிலையானது என்பதும் தெளிவாகப் புரியவரும். இனி மீதமிருப்பது பாவிகளுக்கு விதிக்கப்படும் நரகமோ அல்லது புண்ணியவான்களுக்கு விதிக்கப்படும் சொர்க்கமோ மட்டும்தான் என்பதும் புரியவரும். ஆனால் அப்போது புரிந்துகொள்வது காலம்கடந்த பயனளிக்காத செயலாக இருக்கும். இவ்வுலகில் மக்கள் உண்மை இறைவனது வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப செய்த தங்கள் செயல்கள் நன்மைகளாகவும் அதற்கு மாறாக செய்த செயல்கள் தீமைகளாகவும் பதிவு செய்யப்பட்டு இருப்பதைக் காண்பார்கள்.

● **10:30. அங்கு ஒவ்வொரு ஆத்மாவும் தான் செய்த செயலைச் சோதித்து (அது நன்மையா? தீமையா? என்பதை) அறிந்து கொள்ளும். பின்னர், அவர்கள் தங்களுடைய உண்மையான எஜமானாகிய அல்லாஹ்வின் பக்கமே கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டிருந்த தெய்வங்கள் அனைத்தும் அவர்களை விட்டு மறைந்துவிடும்.**

## இவ்வுலகிலேயே திருந்துவோம்

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீதாணையாக! மறுமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகின் நிலையானது, உங்களில் ஒருவர் தமது சுட்டு விரலைக் கடலில் வைப்பதைப் போன்றுதான். அதில் எந்த அளவு தண்ணீர் ஒட்டிக்கொள்கிறது என்று அவர் பார்க்கட்டும். (அந்த அளவு அற்பமானதேயாகும்.) அறிவிப்பு : முஸ்தவ்ரித் பின் 'த்தாத் (ரலி) நூல்

*முஸ்லிம் (5490)*

அதாவது மறுமை என்பது முடிவில்லாதது அதனோடு இவ்வுலக வாழ்வை ஒப்பிடும்போது இம்மை வாழ்வு என்பது மிக மிக மிக அற்பமானது என்பதைத்தான் மேற்படி நபிமொழி நமக்கு எடுத்துரைக்கிறது. படைப்பினங்களைப் பற்றி சிந்தித்து அவனது வல்லமையையும் உள்ளமையையும் உணரச் சொல்கிறது குர்ஆன். மேலும் அன்றாடம் மனிதன் அனுபவிக்கும் அருட்கொடைகளைப் பற்றி நினைவூட்டி படைத்தவன்பால் மனம்திருந்தியவர்களாக திரும்பச் சொல்கிறான் இறைவன்:

**● 10:31 "உங்களுக்கு வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உணவளிப்பவன் யார்? (உங்கள்) செவிப்புலன் மீதும், (உங்கள்) பார்வைகளின் மீதும் சக்தியுடையவன் யார்? இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றையும், உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? (அகிலங்களின் அனைத்துக்) காரியங்களையும் திட்டமிட்டுச் செயல்படுத்துபவன் யார்?" என்று(நபியே!) நீர் கேளும். உடனே அவர்கள் "அல்லாஹ்" என பதிலளிப்பார்கள் "அவ்வாறாயின் அவனிடம் நீங்கள் பயபக்தியுடன் இருக்க வேண்டாமா?" என்று நீர் கேட்பீராக.**

**● 10:32. உண்மையாகவே அவன்தான் உங்களைப் படைத்துப் பாதுகாக்கும் அல்லாஹ் இந்த உண்மைக்குப் பின்னரும் (நீங்கள் அவனை வணங்காவிட்டால்) அது வழிகேட்டைத் தவிர வேறில்லை (இப்பேருண்மையை விட்டு) நீங்கள் எங்கு திருப்பப்படுகிறீர்கள்?**

# மனம்திருந்துவோருக்கு மன்னிப்புண்டு!

பனூ இஸ்ராயீல்களின் சமுதாயத்தில் ஒருவர் இருந்தார். அவர் தொண்ணூற்றொன்பது மனிதர்களைக் கொன்று விட்டிருந்தார். பிறகு (தன் குற்றங்களுக்காக மனம் வருந்தி, தனக்கு மன்னிப்புக் கிடைக்குமா என்று) விசாரித்தபடி, "(எனக்குப்) பாவ மன்னிப்புக் கிடைக்குமா?" என்று ஒரு மார்க்க அறிஞரிடம் வந்து கேட்டார். அந்தப் அறிஞர், "கிடைக்காது"" என்று கூற, அவரையும் அம்மனிதர் கொன்றுவிட்டார். பிறகு, (மீண்டும் மனம் வருந்தி) விசாரிக்கலானார். அப்போது ஒருவர், "(நல்லோர் வாழும்) இன்ன ஊருக்குப் போ!" என்று அவருக்குக் கூறினார். (அந்த ஊரை நோக்கி அவர் சென்றபோது பாதி வழியில்) மரணம் அவரைத் தழுவியது. (மரணத் தருவாயில்) அவர் தன் நெஞ்சை அந்த ஊர் இருக்கும் திசையில் சாய்த்துக் கொண்(டே இறந்து விட்)டார். அப்போது இறை கருணையைப் பொழியும் வானவர்களும் இறை தண்டனைகளை நிறைவேற்றும் வானவர்களும் அவர் வி'யத்தில் (அவரை யார் அழைத்துச் செல்வது என்று) தர்க்கித்தனர். உடனே இறைவன் அதை நோக்கி, "நீ நெருங்கி வா!"" என்று (அவர் செல்லவிருந்த ஊருக்கு) உத்திரவிட்டான். இதை நோக்கி, "நீ தூரப்போ!"" என்று (அவர் வசித்து வந்த ஊருக்கு) உத்திரவிட்டான். பிறகு, "அவ்விரண்டுக்குமிடையே உள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள்"" என்று (வானவர்களுக்குக்) கூறினான். (அவ்வாறே கணக்கெடுத்த போது) செல்லவிருந்த ஊருக்கு (அவர் வசித்து வந்த ஊரை விட ஒரே) ஒரு சாண் அளவிற்கு அவர் (உடைய உடல்) சமீபமாக இருந்த காரணத்தால் அவருக்குப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவித்தார். (நூல்: புஹாரி)

# மக்கள் சேவையின்றி மகேசனை அணுகமுடியாது

மக்கள் நோய், வறுமை, மன நிம்மதியின்மை, குழந்தையின்மை போன்ற நிலைகளை சந்திக்கும்போது ‘கடவுளே எனக்கு இந்தக் குறையை நிவர்த்தி செய்தால் நான் உனக்காக ஒரு லட்சம் ரூபாய் செலவிடுகிறேன்’ என்பது போல் மனிதர்கள் நேமிதம் (நேர்ச்சை) செய்து கொள்வதை அறிவோம்.

அவர்கள் நினைத்த காரியம் நிறைவேறினால் எந்தக் கடவுளுக்கு நேர்ச்சை செய்தார்களோ அவர்களது வழிபாட்டுத்தலங்களில் அந்தக் காணிக்கையைச் செலுத்துகின்றனர்.

துன்பத்திலிருப்பவன் இறைவனுக்காக இவ்வாறு நேர்ச்சை செய்வதை இஸ்லாமும் அனுமதிக்கின்றது. ஆனால் இறைவனுக்காக பொருளாதாரம் குறித்த எந்த நேர்ச்சையைச் செய்தாலும் அவற்றைப் பள்ளிவாசல் உண்டியலில் போடக் கூடாது.



மாறாக ஏழைகளுக்குத்தான் செலவிட வேண்டும்.

‘கடவுளே உனக்காகப் பத்தாயிரம் ரூபாய் செலவு செய்கிறேன்’ என்று ஒருவர் முடிவு செய்தால் ஏழைகளின் உணவு, உடை, மருத்துவச் செலவு போன்றவற்றுக்காகத்தான் அதைச் செலவிட வேண்டும்.

கடவுளுக்காக நேர்ச்சை செய்த பணத்தில் பள்ளிவாசல் கட்டுவதோ, பள்ளிவாசலுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பதோ கூடாது என்பது இஸ்லாத்தின் கட்டளை.

## ஜகாத் எனும் கட்டாய தர்மம்

இஸ்லாத்தில் தொழுகை, நோன்புக்கு அடுத்த கடமையாக ஸகாத் எனும் கடமை உள்ளது. வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தனது சொத்துக் கணக்கைப் பார்த்து, அதில் இரண்டரை சதவிகிதம் வழங்க வேண்டும். வயல்களில் உற்பத்தியாகும் பொருட்களில் மானாவாரிப் பயிர்களாக இருந்தால் ஐந்து சதவிகிதமும் மற்ற பயிர்களில் பத்து சதவிகிதமும் வழங்க வேண்டும். ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய கால்நடைகளிலும் குறிப்பிட்ட சதவிகிதத்தை வழங்க வேண்டும். இதுவே ஸகாத் எனப்படுகிறது. இது முழுக்கமுழுக்க வறியோர் நலனுக்கே செலவிடப்பட வேண்டும் என்பது இறைகட்டளை:

- **யாசிப்போருக்கும், ஏழைகளுக்கும், அதை வசூலிப்போருக்கும், உள்ளங்கள் ஈர்க்கப்பட வேண்டிய (முஸ்லிமல்லாத)வர்களுக்கும், அடிமை(களை விடுதலை செய்வதற்)கும், கடன்பட்டோருக்கும், அல்லாஹ்வின் பாதையிலும், நாடோடிகளுக்கும் தர்மங்கள் உரியனவாகும். இது அல்லாஹ்வின் கடமை. அல்லாஹ் அறிந்தவன் ஞானமிக்கவன். (திருக்குர்ஆன் 9:60)**

(அல்லாஹ் என்றால் ‘வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்’ என்பது பொருள்.)

இந்த எட்டு வழிகளில்தான் அதைச் செலவிட வேண்டும். இந்த எட்டுமே மனிதர்களுக்கானது தான். மனிதர்களுக்கு உதவுவதை மார்க்கத்தின் ஐந்து கடமைகளில் ஒரு கடமையாக இஸ்லாம் ஆக்கியுள்ளது. செலவிட வேண்டிய எட்டு வழிகளில் முஸ்லிமல்லாத மக்களுக்கு வழங்குவதையும் குறிப்பிட்டு மதம் கடந்த மனித நேயத்தை இஸ்லாம் பேணுகிறது.

**பிறருக்கு வாரி வழங்குவது பற்றி குர்ஆன்**

திருமறைக் குர்ஆனில் பிறருக்கு வாரி வழங்குவது பற்றி அதிகமான அளவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- (சொத்தைப்) பங்கிடும் போது உறவினர்களோ, அனாதைகளோ, ஏழைகளோ வந்து விட்டால் அதில் அவர்களுக்கும் வழங்குங்கள்! அவர்களுக்கு நல்ல சொல்லையே கூறுங்கள்! (திருக்குர்ஆன் 4:8)
- உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவரவரின் உரிமையை வழங்குவீராக! ஒரேயடியாக வீண் விரையம் செய்து விடாதீர்! (திருக்குர்ஆன் 17:26)
- உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தோருக்கும் உதவ மாட்டோம் என்று செல்வமும், வசதியும் உடையோர் சத்தியம் செய்ய வேண்டாம். மன்னித்து அலட்சியம் செய்யட்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்று விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையோன். (திருக்குர்ஆன் 24:22)
- உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவர்களின் உரிமையை வழங்குவீராக! அல்லாஹ்வின் முகத்தை நாடுவோருக்கு இதுவே சிறந்தது. அவர்களே வெற்றி பெற்றோர். (திருக்குர்ஆன் 30:38)
- (கடன் வாங்கிய) அவன் சிரமப்படுபவனாக இருந்தால் வசதி ஏற்படும் வரை அவகாசம் கொடுக்க வேண்டும். நீங்கள் அறிந்து கொண்டால் அதைத் தர்மமாக்கி விடுவது உங்களுக்குச் சிறந்தது. (திருக்குர்ஆன் 2:280)
- உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவது நன்மையன்று. மாறாக அல்லாஹ், இறுதி நாள், வானவர்கள், வேதம், மற்றும் நபிமார்களை நம்புவோரும் உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், நாடோடிகள், யாசிப்போர், மற்றும் அடிமைகளை விடுதலை செய்வதற்கு (மன) விருப்பத்துடன் செல்வத்தை வழங்குவோரும், தொழுகையை நிலை நாட்டுவோரும், ஸகாத்தை வழங்குவோரும், வாக்களித்தால் தமது வாக்கை நிறைவேற்றுவோரும், வறுமை, நோய், மற்றும் போர்க்களத்தில் சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள். அவர்களே உண்மை கூறியவர்கள். அவர்களே (இறைவனை) அஞ்சுபவர்கள். (திருக்குர்ஆன் 2:177)

மனிதர்களுக்கு உதவுவது தான் கடவுளுக்குச் செய்யும் வணக்கம் என்பதை மேற்கண்ட வசனங்களிருந்து அறியலாம்.

- “ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமுக்கு செய்யும் கடமையாக 5 விஷயங்கள் இருக்கின்றது: ஸலாமுக்கு (உங்கள் மீது இறைசாந்தி உண்டாவதாக என்று முகமன் கூறும்போது) பதில் சொல்வது , நோயுறும்போது நலம் விசாரிப்பது, மரண ஊர்வலத்தைப் பின் தொடர்வது, விருந்து அழைப்புக்கு பதில் சொல்வது, தும்மியவருக்கு யர்ஹமுகல்லாஹ் (உங்கள் மீது இறைவனின் கருணை உண்டாகட்டும்) என்று பிரார்த்திப்பது” என்று நபி (ஸல்)சொன்னார்கள். (நூல். புகாரி)

# அண்டை வீட்டாரின் உரிமைகள்

**(அக்டோபர் இதழ் தொடர்ச்சி)**

### சிறந்ததைத் தேர்வு செய்யுங்கள்

● “எனது உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! தமக்கு விரும்பியதை தன் அண்டை வீட்டாருக்கு அல்லது தன் சகோதரனுக்கு விரும்பாத வரை ஒரு அடியான் (உண்மையான) நம்பிக்கை கொண்டவனாக மாட்டான்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: முஸ்லிம்

### அன்பளிப்புச் செய்வதில் முதலிடம்

● “இறைவனின் தூதரே! எனக்கு இரண்டு அண்டை வீட்டார் உள்ளனர். அவர்களில் யாருக்கு நான் அன்பளிப்புச் செய்வது?“ என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “இருவரில் யார் வீட்டு வாசல் உனக்கு நெருக்கமாக இருக்கிறதோ அவருக்கு“ என்றார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)நூல்: புகாரீ

### மரப் பலகை அடித்தல்

● “ஒருவர் தன் (வீட்டுச்) சுவரில் தன் அண்டை வீட்டுக்காரர் மரக்கட்டை பதிப்பதைத் தடுக்க வேண்டாம்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று அபூஹுரைரா (ரலி) சொல்லி விட்டு “என்ன இது! உங்களை இதை (நபிகளாரின் கட்டளையைப்) புறக்கணிப்பவர்களாக நான் பார்க்கின்றேனே! இறைவன் மீதாணையாக! நான் இந்த நபி வாக்கைத் தொடர்ந்து எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருப்பேன்“ என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அல்அ∴ரஜ் நூல்: புகாரீ

### வீட்டை விற்றல்

நமது வீட்டை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டால் முதலில் அண்டை வீட்டாரிடம், விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்க வேண்டும். அவர் தேவை இல்லை என்றால் மட்டுமே மற்றவரிடம் விற்பனை செய்ய வேண்டும். இதுவும் அண்டை வீட்டாருக்கு இருக்கும் உரிமைகளில் ஒன்றாகும்.

நான் ஸஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களிடம் தங்கியிருந்தேன். அப்போது மிஸ்வர் பின் மக்ரமா (ரலி) அவர்கள் வந்து, தமது கையை எனது தோள் புஜங்களில் ஒன்றில் வைத்தார்கள். அப்போது (அடிமையாயிருந்து) நபி (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அபூரா∴பிவு (ரலி) அவர்கள் வந்து “ஸஅதே! உமது வீட்டிலுள்ள எனக்குச் சொந்தமான இரண்டு அறைகளை என்னிடமிருந்து வாங்கிக் கொள்வீராக!“ எனக் கூறினார்கள். அதற்கு ஸஅத் (ரலி) அவர்கள் “இறைவன் மீது ஆணையாக! அவற்றை நான் வாங்க மாட்டேன்“ என்றார்கள். அருகிலிருந்த மிஸ்வர் (ரலி) அவர்கள், ஸஅத் (ரலி) அவர்களிடம் “இறைவன் மீது ஆணையாக! நீர் வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்“ என்றார்கள். அப்போது ஸஅத் (ரலி) அவர்கள், “இறைவன் மீது ஆணையாக! தவணை அடிப்படையில் நாலாயிரம் வெள்ளிக் காசைத் தவிர உமக்கு அதிகமாகத் தர மாட்டேன்“ என்று கூறினார்கள். அதற்கு

அபூராஃபிவு (ரலி) அவர்கள் “ஐநூறு தங்கக் காசுகளுக்கு அது கேட்கப்பட்டுள்ளது. அண்டை வீட்டில் இருப்பவர் அண்மையில் இருப்பதால் அவரே அதிகம் உரிமை படைத்தவர்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுறாவிட்டால் ஐநூறு தங்கக் காசுக்குக் கேட்கப்பட்டதை நாலாயிரம் வெள்ளிக் காசுக்கு உமக்கு விற்க மாட்டேன்“ என்று கூறி விட்டு ஸஅதுக்கே விற்றார். அறிவிப்பவர்: அம்ர் பின் ஷரீத் நூல்: புகாரீ

**நன்மையான காரியங்களில் கூட்டாக செயல்படுங்கள்**

நானும் அன்சாரித் தோழர்களில் ஒருவரான எனது அண்டை வீட்டுக்காரரும், உமைய்யா பின் ஜைத் என்பாரின் சந்ததிகள் வசித்து வந்த இடத்தில் வாழ்ந்து வந்தோம். அது மதீனாவின் உயரமான இடங்களில் ஒன்றாகும். நபி (ஸல்) அவர்களுடைய அவைக்கு நாங்கள் முறைவைத்துச் சென்று வந்தோம். ஒரு நாள் அவர் செல்வார். ஒரு நாள் நான் செல்வேன். அறிவிப்பவர்: உமர் (ரலி), நூல்: புகாரீ (89)

● நண்பர்களில் இறைவனிடம் சிறந்தவர் தம் நண்பர்களிடம் சிறந்தவர்களாக இருப்பவர்களே! பக்கத்து வீட்டாரில் இறைவனிடம் சிறந்தவர், தம் பக்கத்து வீட்டாரிடம் சிறந்தவராக இருப்பவரே! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் :அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), நூல்: திர்மிதீ

**நல்ல அண்டைவீட்டார்**

● நல்ல அண்டைவீட்டார் அமைவது, நல்ல வாகனம் கிடைப்பது, விசாலமான வீடு இருப்பதும் ஒரு மனிதனின் நற்பேறில் உள்ளதாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: அஹ்மத்

**மூன்று வகை அண்டை வீட்டார்**

● “அண்டை வீட்டார் மூன்று வகைப்படுவர். 1. ஒரேயொரு உரிமையுள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமல்லாத அண்டை வீட்டார். அவருக்கு அண்டை வீட்டார் என்று உரிமை மட்டும் உள்ளது. 2. இரண்டு உரிமைகள் உள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமான அண்டை வீட்டார். இவருக்கு அண்டை வீட்டார் உரிமையும், இஸ்லாமிய மார்க்க உரிமையும் உண்டு. 3. மூன்று உரிமைகள் உள்ள அண்டை வீட்டார். இவர் முஸ்லிமாகவும் உறவினராகவும் உள்ளவர். இவருக்கு அண்டை வீட்டடார் என்ற உரிமையும் இஸ்லாமிய மார்க்க உரிமையும் உறவுக்காரர் என்ற உரிமையும் உண்டு“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) நூல்: தப்ரானீ

# வாசகர் எண்ணம்

● நவம்பர் இதழ் கொண்டுவந்த போஸ்ட்மேனும் படித்தார். அட்டகாசமாக இருந்தது என்று சொன்னார். நானும் 10 நிமிடத்தில் படித்து விட்டேன் அட்டகாசமாக இருந்தது. நோய்களின் தன்மை, நோயாளிகளை நலம் விசாரித்தல், அவர்களுக்கு துவா செய்தல், பெண்மணிக்காக நபிகளார் துவா செய்தது, நபிகளார் சொன்ன நற்செய்திகள் பலவற்றை அள்ளித்தந்தது இதழ். பாராட்டுக்கள்.

- **டி எம். பெரோஸ்கான், தேனீ,**

# அண்டை வீட்டாருக்கு தொல்லை தருதல் கூடாது

வீட்டில் ரேடியோ டேப்ரிக்கார்டர், டி.வி. போன்றவற்றை வைத்துக் கொண்டு இரவு நேரங்களில் அல்லது ஓய்வு நேரங்களில் அண்டை வீட்டாருக்குக் கடும் சப்தத்தை ஏற்படுத்தி தொல்லை தருவது, அல்லது சண்டையிட்டுக் கொண்டு அடுத்தவர் உறக்கத்தைக் கெடுப்பது என்று எந்த வகையிலும் அண்டைவீட்டாருக்குத் தொல்லை தரக்கூடாது.

● "இறைவனையும் மறுமை நாளையும் நம்பியவர் தன் அண்டை வீட்டாருக்குத் தொந்தரவு தரவேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரீ *(5187)*

● "இறைவன் மீது ஆணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். இறைவன் மீது ஆணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன். இறைவன் மீது ஆணையாக! அவன் இறைநம்பிக்கையாளன் அல்லன்" என்று (மூன்று முறை) நபி (ஸல்) அவர்கள கூறினார்கள். "அவன் யார்? இறைத்தூதரே!" என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் "எவனுடைய நாசவேலைகளிலிருந்து அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லையோ அவன்தான்" என்று பதிலளித்தார்கள்.

● எவனுடைய நாசவேலைகளிலிருந்து அண்டைவீட்டார் பாதுகாப்பு பெறவில்லை அவர் சுவர்க்கம் செல்லமுடியாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்

● ஒரு அடியானின் இறைநம்பிக்கை சரியாகாது, அவனுடைய உள்ளம் சரியாகும் வரை. அவனுடைய உள்ளம் சரியாகாது அவனுடைய நாவு சீராகும் வரை. யாருடை அண்டைவீட்டார் அவனின் நாசவேலையிலிருந்து பாதுகாப்புபெறவில்லையோ அந்த மனிதன் சுவர்க்கம் போக முடியாது என்று நபிகளார் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: அஹ்மத் *(12575)*

**வணக்கசாலி நரகம் புகுதல்**

● ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து "ஒரு பெண்மணி அதிகம் தொழுகை, நோன்பு, தர்மம் செய்பவளாக கருதப்படுகிறாள் ஆனால் அவள் அண்டைவீட்டாருக்கு தன் நாவால் தொல்லை தருகிறாள். (இவளைப் பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?)" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "இவள் நரகில் இருப்பாள்" என்றார்கள். "இன்னொரு பெண்மணி குறைந்த நோன்பு, தர்மம், தொழுகை உடையவளாக இருக்கிறாள் என்று கருதப்படுகிறாள். அவள் தர்மம் செய்தால் வெண்ணைத் துண்டுகளைத்தான் தர்மம் செய்வாள். ஆனால் அவள் அண்டை வீட்டாருக்கு நாவால் தொல்லை தருவதில்லை. (இவளைப் பற்றி தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?)" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "இவள் சுவர்க்கத்தில் இருப்பாள்" என்றார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: அஹ்மத் *(9298)*

**மாபெரும் குற்றம்**

நான் நபி (ஸல்) அவர்களிடம் “இறைவனிடம் பாவங்களில் மிகப்பெரியது எது?“ என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “இறைவன் உன்னைப் படைத்திருக்க அவனுக்கு நீ இணைகற்பிப்பது“ என்று சொன்னார்கள். நான், “நிச்சயமாக அது மிகப் பெரிய குற்றம்தான்“ என்று சொல்லிவிட்டு “பிறகு எது?“ என்று கேட்டேன். “உன் குழந்தை உன்னுடன் (அமர்ந்து உன் உணவைப் பங்குப்போட்டு) உண்ணும் என அஞ்சி அதனை நீ கொல்வது“ என்று சொன்னார்கள். நான், “பிறகு எது?““ என்று கேட்க, அவர்கள், “உன் அண்டை வீட்டானின் மனைவியுடன் நீ விபச்சாரம் செய்வது“ என்று சொன்னார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரலி), நூல்: புகாரீ (4477)

● தன் அண்டைவீட்டாருடன் தொடர்புள்ள எத்தனையோ பேர், இறைவன்விடம் என் இறைவா! இவன் என்னை (வீட்டுக்குள்) விடாமல் கதவை தாளிட்டுக் கொண்டான், நல்லதை (எனக்கு தராமல்) தடுத்தான் என்று மறுமைநாளில் கூறுவான். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: அதபுல் மு.ஃ.ப்ரத்

**தொல்லையை பொறுத்துக் கொள்ளுங்கள்**


● ஒரு மனிதனுக்கு தொல்லை தரும் அண்டைவீட்டார் இருக்கிறார்கள். அவரோ அவரின் தொல்லைகளை பொறுத்துக் கொண்டால் இறைவன் அவரின் வாழ்வு, சாவுக்கு போதுமானவானாக இருப்பான் என்று நபி (ஸல்அவர்கள் கூறினார்கள். (நூல்: ஹாகிம் 2446)

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018(நுங்கம்பாக்கம்), 9840527687(பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262**


Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# உங்களுக்குள் உற்று நோக்கினால்..!





ஒளிக் கதிர்களுக்குப் பதில் மின்னணுக் கதிர்களைப் பயன்படுத்தி மிக நுண்ணிய பொருளையும் பல லட்சம் மடங்கு பெரிதாகக் காட்டக்கூடிய அதிக சக்திவாய்ந்தவை மின்னணு நுண்ணோக்கிகள் (electron microscopes). இவை இன்று நம் உடற்கூறுகளுக்குள் இறைவன் புதைத்துவைத்துள்ள பற்பல அதிசயங்களை வெளிக் கொணருகின்றன. பதினான்கு நூற்றாண்டுகளாக இறைவன் தன் திருமறையில் இவற்றை ஆராயத் தூண்டிக் கொண்டே இருப்பதைப் பாருங்கள்:


- **உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?? (திருக்குர்ஆன் 51:21)**




இரத்தத்தின் சிகப்பு அணுக்கள்




கண்ணின் கருவிழிப் படலம்




மூளை செல்கள் இடையே இணைப்புகள



விழிக்குள் திரை குறுக்கு வெட்டுத் தோற்றம்




இரத்தக் குழாயும் சிவப்பு அணுக்களும்



நுரையீரலில் நுண்குழாய்கள்



நரம்பு இழைகளின் குறுக்கு வெட்டுத் தோற்றம்



மூளை உள்ளறை சுவரில் சுரப்பிகள்

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

**(PRINTED MATTER)**

To

..................................................................

..................................................................

..................................................................

..................................................................

● நீங்கள் அவனிடம் கேட்ட யாவற்றிலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான். இறைவனின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர்களாயின் அவற்றை நீங்கள் எண்ணி முடியாது! நிச்சயமாக மனிதன் மிக்க அநியாயக்காரனாகவும், மிக்க நன்றி கெட்டவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 14:34)

